மிசிசவுகாவின் குடியிருப்பாளர்களுக்கு அல்லது மிசிசவுகாவில் வேலை செய்யும் அல்லது பாடசாலைக்குச் செல்லும் அல்லது சொத்துக்களைக் கொண்டிருக்கும் ஆட்களுக்கு நூலக அட்டை ஒன்று **இலவசம்**.

எந்தவொரு நூலக அமைவிடத்திலிருந்தும் பொருட்களைப் பெறுவதற்காக நீங்கள் உங்களது செல்லுபடியான அட்டையைப் பயன்படுத்தலாம். நூலக அட்டை ஒன்றைப் பெறுவதற்காக, உங்களது பெயரும் முகவரியும் அடங்கிய அடையாள அட்டையைக் கொண்டு வருக. பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் போன்றவற்றில் எவையேனும் மாற்றங்கள் ஏற்படின், உடனடியாக ஊழியர் குழாமுக்கு அறிவிக்க. காணாமற் போன, பழுதடைந்த, மறந்து விட்ட அல்லது களவெடுக்கப்பட்ட அட்டைகளுக்காக கட்டணங்கள் அறிவிடப்படும்.



**வடமில் மிசிசவுகா**
மிசிசவுகா நூலகத் தொகுதி அமைவிடங்கள் அனைத்திலும் இணையத்தை இலவசமாக அணுகுக; இதற்கு செல்லுபடியான நூலக அட்டையொன்று தேவைப்படுவதில்லை.

**நூலகத்திற்கு இட்டுச் செல்லும் பாதைகள் எல்லாம்**
உங்கள் உள்ளூர் நூலகத்திற்கான பேருந்துப் பாதை பற்றிய தகவல்களுக்கு, miway.ca இற்குச் செல்க அல்லது 905-615-4636 / **905-615-INFO** இல் MiWay ஐ அழைக்க.

**எம்மைத் தொடர்பு கொள்ள**
Mississauga Library System
301 Burnhamthorpe Road W.
Mississauga, ON L5B 3Y3
தொ.பே.: **905-615-3500**
தொ.ந.: 905-615-3625
**mississauga.ca/library**
library.info@mississauga.ca
www.facebook.com/mississaugalibrary
http://twitter.com/mississaugalib/



திருத்தப்பட்டது, யனவரி 2013

# உங்கள் நூலகம் தொடர்பான அனைத்தும்

## நூலகங்கள் வாழ்க்கையை மாற்றியமைக்கின்றன

MISSISSAUGA
*Leading today for tomorrow*



# இரவல் பெறுவது தொடர்பாக

பெரும்பாலான நூல்களும் இறுவட்டுக்களும் 3 வாரங்களுக்கு இரவல் பெறப்படலாம். பெரும்பாலான டிவிடிக்கள், காணொளி விளையாட்டுக்கள், சஞ்சிகைகள் என்பன ஒரு வாரத்துக்கு இரவல் பெறப்படலாம்.

## நூல்கள்

1.3 மில்லியனுக்கு மேற்பட்ட நூல்களை இரவல் பெறுக.

## சஞ்சிகைகள்

1000 இற்கு மேற்பட்ட சஞ்சிகைகளை அணுகுக.

## டிவிடிக்கள், காணொளி விளையாட்டுக்கள் மற்றும் இறுவட்டுக்கள்

திரைப்படங்கள், விவரணப் படங்கள், பன்மொழிப் பொருட்கள் என்பவற்றை டிவிடிக்களிலிருந்தும், இசை, ஒலி நூல்கள் என்பவற்றை இறுவட்டுக்களிலிருந்தும் தெரிவு செய்க. Wii, Playstation 3 மற்றும் Xbox இயக்கிகள் என்பவற்றுக்காகவும் காணொளி விளையாட்டுக்கள் கிடைக்கப் பெறுகின்றன.

## மின்னல் கடன்கள்

இது நீங்கள் காத்திருக்காமலேயே அலுமாரியில் கண்டுகொள்ளத் தக்கனவான, அவ்வப்போது நன்கு வில்படுவனவற்றின் ஒரு தொகுப்பு. நூல்களை 7 நாட்களுக்கு இரவல் பெற இயலுமாகும். இப்பொருட்களை முன்பதிவு செய்யவோ அல்லது புதுப்பிக்கவோ முடியாது.

## அட்டகாசம், அமர்க்களம்

செம்மையான, புகழ் பெற்ற, விமர்சனம் பெற்ற தலைப்புக்களின் ஒரு கூட்டு எல்லா அமைவிடங்களிலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. புகழ் பெற்ற கதைகளும் கதை அல்லாதனவுமான வளர்ந்தோர், இளைஞர், இளம் பராயத்தினர் மற்றும் சிறுவர்களுக்கான நூல்களின் பல பிரதிகள் கிடைக்கப் பெறுகின்றன.

## உங்களுக்குத் தேவையானது வெளிச் சென்றிருப்பின்

இணையவழி அட்டவணையைப் பயன்படுத்தி வீட்டிலிருந்தோ அல்லது நூலகத்திலோ நீங்களாகவே வைத்திருப்பு ஒன்றை ஏற்படுத்தலாம். உங்களது பொருள் கிடைக்கப் பெறும் போது, உங்களுக்கு அறிவிக்கப்படும். குறித்த நேரத்தில் பெறப்படாத வைத்திருப்புக்களுக்காக நீங்கள் கட்டணம் அறவிடப்படுவீர்கள். நூலகத்தின் இணையவழி அட்டவணையில் இல்லாத பொருட்களை நூலகவிடைக் கடன் மூலம் பெற இயலலாம். உதவிக்காக ஊழியர் குழாமிடம் வினவுக.

## நூலகப் பொருட்களைப் புதுப்பித்தல்

பெரும்பாலான நூலகப் பொருட்கள் புதுப்பிக்கப் படலாம். ஒரு பொருள் தவணை கடந்திருப்பினும், அது புதுப்பிக்கப் படலாம் என்பதுடன் தாமதக் கட்டணங்கள் உங்களது பதிவிற் சேர்க்கப்படும். பொருட்கள் புதுப்பிக்கப் படும் நாளிலிருந்தே புதுப்பிக்கப் படுகின்றனவே தவிர அவற்றின் மூலத் தவணைத் திகதியிலிருந்தல்ல. டிவிடிக்கள், காணொளி விளையாட்டுக்கள், சஞ்சிகைகள் என்பன 7 நாட்களுக்குப் புதுப்பிக்கப்படும். ஏனைய எல்லாப் பொருட்களும் 3 வாரங்களுக்குப் புதுப்பிக்கப்படும்.

பொருட்களைப் புதுப்பித்தல்:

- இணையவழியில் **mississauga.ca/library** இல்
- தொலைபேசி **905-615-3500, அழுத்துக #1**

## ஒரு பொருள் புதுப்பிக்கப்பட முடியாத நிலைமைகள்:

- அது மின்னல் கடன் ஒன்றாக இருத்தல்
- ஏற்கனவே ஒரு தடவை புதுப்பிக்கப்பட்ட ஒரு டிவிடி, காணொளி விளையாட்டு அல்லது சஞ்சிகை ஆக இருத்தல்
- மற்றொருவரால் வேண்டப்பட்டதாக இருத்தல்
- ஏற்கனவே இரு தடவை புதுப்பிக்கப்பட்டிருத்தல்

ஒரு பொருள் புதுப்பிக்கப்பட முடியாவிடின், குறித்த திகதிக்கு முன் அது மீளளிக்கப்பட வேண்டும்.

## நூலகப் பொருட்களை மீளளித்தல்

பொருட்களை மீளளிக்க வேண்டிய திகதி வெளிக் கொணரும் போது உங்களுக்கு வழங்கப்படும் பற்றுச் சீட்டில் அச்சிடப்பட்டிருக்கும். பொருட்கள் மீளளிக்கப்பட வேண்டிய திகதியின் நாள் முடிய முன்னர் அவை நூலகத்தில் மீளளிக்கப்பட வேண்டும். ஏனையோர் அவற்றை இரவல் பெறக்கூடியதாக, குறித்த நேரத்தினுள் நூலகப் பொருட்களை மீள்ளியுங்கள். ஒவ்வோர் அமைவிடத்திலும் உங்களது வசதிக்காக நூல் வைப்பிடங்கள் காணப்படுகின்றன. மிசிசவுகா நூலகத் தொகுதியின் ஓரிடத்தில் பெறப்பட்ட பொருட்கள் மற்றைய ஏதேனும் ஓரிடத்தில் மீளளிக்கப்படலாம்.

## தாமதக் கட்டணங்கள்

உங்களது அட்டையின் மீது வெளிக் கொண்டு செல்லப்பட்ட பொருட்களுக்கு நீங்கள் பொறுப்பாவீர்கள். குறித்த திகதியின் பின்னர் ஒவ்வொரு நாளுக்கும் அல்லது நாளின் பகுதிக்கும் கட்டணங்கள் கணிக்கப்படும்.

**எல்லா நூலகப் பொருட்களும் (பின்வருவன நீங்கலாக)**
நாளொன்றுக்கு ஒரு பொருளுக்கு $0.35
(ஒரு பொருளுக்கு ஆகக் கூடியது $10)

டிவிடிக்கள், மின்னல் கடன்கள், காணொளி விளையாட்டுக்கள்
நாளொன்றுக்கு ஒரு பொருளுக்கு $1
(ஒரு பொருளுக்கு ஆகக் கூடியது $10)

## சேவைக் கட்டணங்கள் (பொருத்தமான வரிகள் உட்பட)

**குடியிருப்பாளரல்லாதோர்** - அடையாள அட்டையுடன் ஆண்டுக்கு $30
**மறந்து விட்ட அட்டை** - அடையாள அட்டையுடன் $1
**பதிலீட்டு அட்டை** - அடையாள அட்டையுடன் $2

**குறித்த நேரத்தினுள் கையேற்காத வைப்புக்கள்**
வைப்பொன்றுக்கு $2

**சிதைந்த அல்லது காணமற் போன பொருள்**
பொருளுக்கான நூலகத்தின் பதிலீட்டுச் செலவு. கட்டணம் செலுத்தப்பட்ட சிதைந்த மற்றும் காணாமற் போன பொருட்கள் நூலகத்தின் சொத்துக்களாகவே தொடரந்தும் இருக்கும்.

**சேகரிப்பு முகவரகக் கட்டணம்** - $12.80

**தற்காலிகக் கணனி அட்டை ஒன்றை ஒதுக்கிக் கொள்ளல்**
1 நாள் - $1, 1வாரம் - $5, 1மாதம் - $15

செலுத்தப்படாத கட்டணங்கள் அனைத்தையும் சேகரிப்பதற்கு நூலகம் முயல்கிறது. கணிசமான மற்றும் தவணை கடந்த நிலுவைகளைச் சேகரிப்பதற்காக நூலகம் ஒரு சேகரிப்பு முகவரத்தின் சேவைகளைப் பயன்படுத்துகிறது. சேகரிப்பு முகவரகத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மேலதிகக் கட்டணம் ஒன்றுக்கு உட்படலாம்.

# இதில் உங்களுக்கு என்ன உள்ளது?

## நிகழ்ச்சித் திட்டங்கள்

நூலகம் பல்வேறு வகையான நிகழ்ச்சித் திட்டங்களை வழங்குகிறது. உதாரணங்கள்:

**சிறுவர்களுக்கு**: கதை நேரங்கள், வாசிப்புக் கழகங்கள், கோடை கால/மார்ச்சு விடுமுறை நிகழ்ச்சிகள்.

**இளைஞர்களுக்கு:** பட்டறைகள், இளைஞர் அறிவுரைக் குழுக்கள், தொண்டு வாய்ப்புக்கள்.

**புதுவரவினருக்கு:** ஆங்கில உரையாடல் வட்டங்கள், குடியிருப்பு முகவரகத் தகவல் நிகழ்ச்சிகள், உள்ளகக் குடியிருப்புச் சேவைகள்.

**முதியோர் உட்பட, வளர்ந்தோருக்கு:** பல்வேறு தலைப்புக்களைப் பற்றிப் பேசுவோர், செயல் விளக்கங்கள், நூற்கழகங்கள், கருத்தரங்குகள்.

விபரங்களுக்காக உங்களது ஆகக் கிட்டிய அமைவிடத்தைத் தொடர்பு கொள்க.நூலக நிகழ்ச்சித் திட்டங்கள், நிகழ்வுகள், சேவைகள் என்பவற்றின் நாட்காட்டி ஒன்றுக்கு, **mississauga.ca/Library** எனும் நூலக வலைத்தளத்தில் பார்த்துக் கொள்க.

## தகவற் சேவைகள் - என்னிடம் கேளுங்கள்

நூலக ஊழியர் குழாம் தகவல்களைக் கண்டு கொள்ளவும் பொருட்களைத் தெரிவு செய்யவும் உங்களுக்கு உதவு முகமானதாக எப்போதும் இருக்கும். **என்னிடம் கேளுங்கள்** (ASK ME) பொத்தானை அணிந்துள்ள ஊழியர்களைத் தேடிப் பார்க்க.

## ஒளிப்பிரதி எடுத்தல்

நூலக அமைவிடங்கள் அனைத்திலும் ஒளிப்பிரதி எடுப்பான்கள் காணப்படுகின்றன. பிரதி அட்டை ஒன்றைக் கொள்வனவு செய்தல் வேண்டப்படுகிறது. பிரதி எடுத்தல் பதிப்புரிமைச் சட்டங்களுக்குக் கட்டுப்பட்டது.

## கலைப் பொருட்காட்சிகளும் கண்காட்சிகளும்

காட்சிப்படுத்தல்களும் வழக்கமான கலைக் கண்காட்சிகளும் பெரும்பாலான கிளைகளில் காணக் கிடைக்கலாம். கலைக்கூடம் மற்றும் காட்சிப்படுத்தற் பெட்டிகள் மாதத்தின் முன்னரே வாடகைக்குப் பெறப்படலாம். ஒதுக்கீட்டுத் தகவல்களுக்காக, மிசிசவுகா மாநகர சபையின் வாடிக்கையாளர் சேவை மையத்தை 905-615-4100 இல் அழைத்து **வசதி ஒதுக்கீடுகள்** என்பதைத் தெரிவு செய்க.

## ஏடு மற்றும் சுவரொட்டி விநியோகம்

உங்களது பட்டறையை அல்லது கண்காட்சியை அல்லது காட்சிப்படுத்தலை சமுதாயத்திடம் விளம்பரப்படுத்த வேண்டுமா? உங்களது சமுதாயத்துக்கு அல்லது இலாப நோக்கற்ற குழுவுக்கு மேலும் உறுப்பினர்கள் அல்லது தொண்டர்கள் தேவையா? சமுதாய மற்றும் இலாப நோக்கற்ற குழுக்களுக்காக நூலகம் அதன் கிளை அமைவிடங்களில் ஏடுகளையும் சுவரொட்டிகளையும் விநியோகிக்கும். வர்த்தக விளம்பரத் தகவல்களுக்கு, நூலகத்தின் சமுதாய அபிவிருத்தி அலுவலரை **905-615-3200**, **நீட்சி 3606** இல் தொடர்பு கொள்க.

## கூட்ட அறைகள்

மாதாந்தக் கூட்டம் ஒன்றை நடத்துவதற்கு ஓர் அறை தேவையா? நூலகத்தில் கூட்ட அறைகளும் கேட்போர் கூடம் ஒன்றும் வாடகைக்கு உள்ளன. ஒதுக்கீட்டுத் தகவல்களுக்கு, மிசிசவுகா மாநகர சபையின் வாடிக்கையாளர் சேவை மையத்தை **905-615-4100** இல் தொடர்பு கொள்க.

## தொழில் மையம்

உத்தியோகங்கள், கல்வித் திட்டமிடல், தொழில் திட்டமிடல், பயிற்சி, வேலை தேடல் உபாயங்கள் என்பவற்றுக்கு நூலகம் விரிவான தகவல்களை வழங்குகிறது. தகவல் வேண்டல்களுக்காக அல்லது ஒரு சுற்றுலாவை ஒதுக்கீடு செய்வதற்காக, அழைக்க **905-615-3500, நீட்சி 3589**.

## உள்ளூர் வரலாறு

மிசிசவுகாவினதும் பீல் வலயத்தினதும் வரலாற்றுடன் தொடர்பான ஒட்டு நூல்கள், உள்ளூர் ஆவணக் காப்பகங்கள் மற்றும் ஒளிப்படங்களின் ஒரு பெருந் தொகுப்பு என்பன உட்பட செவ்விய, பழைய மற்றும் அரிய பொருட்களின் ஒரு விரிவான சேகரிப்பு நூலகத்தினுட் பயன்படுத்துவதற்காக மிசிசவுகா மத்திய நூலகத்தில் கிடைக்கப் பெறுகிறது. குடிவழி சார் பொருட்கள் நூலக அமைவிடங்கள் அனைத்திலும் வழிமரபு என்பதனூடாகக் கிடைக்கும்.

# சிறப்புச் சேவைகள்

## கொண்டு செல்லல் நூல்கள்

உங்களது சொந்த நூற்கழகத்தை நடத்துகிறீர்களா? தெரிவு செய்த தலைப்புக்களில் 15 பிரதிகள் வரையிலும், அவ்வாறே மீள்பார்வைகளினதும் கேள்விகளினதும் ஒரு பொதியை நூலகம் வழங்கலாம். தகவல்களுக்காக, அழைக்க **905-615-3500, நீட்சி 3544**.

## சிறுவர்களின் ஒரு கதைக்காகச் சுழற்றுதல்

உங்களது வீட்டின் வசதியினுள்ளேயே ஒவ்வொரு வாரமும் ஒரு புதிய முன்பள்ளிக் கதையைக் கேட்க. நாளின் எந்நேரத்திலும், உங்களுக்கு வேண்டிய மட்டும் அழைக்க. ஒரு கதை கேட்பதற்கு, அழைக்க **905-615-3500, அழுத்துக #5**.

## இல்லத்தினுட் கட்டுப்பட்ட சேவை

இல்லத்தினுட் கட்டுப்பட்ட சேவையானது முடங்கிய நூலகப் பாவனையாளர்களுக்கு வழங்கப்படுகிறது. மேலதிக தகவல்களுக்காக, அழைக்க **905-615-3500, நீட்சி 3544**.

## மொழிகள்

நூலகம் 22 மொழிகளில் பொருட்களை வழங்குவதுடன் சமுதாய ஆதரவை வரவேற்கிறது. மொழிகள் பலவற்றைக் கற்பதற்கான பாடநெறித் தொகுதிகளை நீங்கள் எல்லா அமைவிடங்களிலிருந்தும் பெற்றுக் கொள்ளலாம்.

## பெரிய அச்சு நூல்கள்

எல்லா அமைவிடங்களிலும் நூல்கள் கிடைக்கப் பெறுகின்றன.

## இணையவழி நூற்கழகங்கள்

புதிய நூல்களிலிருந்து மாதிரி அத்தியாயங்களையும், புதிய நூல்களையும் நூலாசிரியர்களையும் பற்றிய செய்தி மடல்களையும் பெறுவதற்காகப் பதிவு செய்க. **mississauga.ca/library** இற்குச் சென்று **Newsletters** ஐச் சொடுக்குக.

## பொதுமக்களின் பாவனைக்கான கணனிகள்

இணையத்துக்கும் மைக்ரோசொப்ட் ஒபீஸுக்குமான பொதுமக்களுக்கான அணுக்கம் நூலக அமைவிடங்கள் அனைத்திலும் கிடைக்கும். செயல் நிலையங்கள் USB ஆளிகளைக் கொண்டுள்ளன. செல்லுபடியான நூலக அட்டை ஒன்றின் மூலம் வீட்டிலிருந்தோ அல்லது நூலகத்திலோ நீங்கள் நூலகக் கணனியைப் பயன்படுத்துவதற்கான ஓர் அமர்வை ஒதுக்கிக் கொள்ளலாம். செல்லுபடியான நூலக அட்டையொன்று இல்லாமல் தற்காலிகக் கணனி அணுக்கத்திற்காக ஒரு கட்டணம் உண்டு.

## மரபுரிமை மின்னூல் தொகுப்பு

நூலகம் தனது உள்ளூர் வரலாற்று நூல்களைக் கொண்ட எமது மரபுரிமை (Our Heritage Series) தொடரை எண்ணிமம் ஆக்கியுள்ளது. அவை முழு உரையும் கொண்டுள்ள அதே வேளை, முழுமையாகத் தேடக் கூடியனவாகும். **mississauga.ca/library** இற்குச் சென்று **நூல்களும் வாசிப்பும்** என்பதைச் சொடுக்கி **மின்னூல்கள்** என்பதைச் சொடுக்குக.

## வீட்டிலிருந்து அல்லது பாடசாலையிலிருந்து அல்லது அலுவலகத்திலிருந்து ஆராய்ச்சி செய்தல் – 24/7

குறிப்புக்கான மின்னூல்கள், செய்தித்தாள் மற்றும் சஞ்சிகைக் கட்டுரைகள், புலமை சார் சஞ்சிகைகள், நூல் மீள்பார்வைகள் மற்றும் இவற்றுக்கு மேல் மின்வளங்கள் (eResources) அணுக்கம் வழங்குகிறது. சுகாதாரம், வணிகம், உலகச் செய்திகள், இலக்கியம், விளையாட்டுக்கள், கலைகள், களியாட்டம் உட்பட ஏராளமான வகைகளின் தலைப்புக்களை உள்ளடக்கும் 30 இற்கும் மேற்பட்ட மின்வளங்களைத் தேடுக. செல்லுபடியான மிசிசவுகா நூலக அட்டையொன்றின் மூலம் வீட்டிலிருந்தோ, பாடசாலையிலிருந்தோ, அலுவலகத்திலிருந்தோ நீங்கள் உங்கள் ஆராய்ச்சியை மேற்கொள்ளலாம். **mississauga.ca/library** இற்குச் சென்று **ஆராய்ச்சி** என்பதைச் சொடுக்குக.

## தரவிறக்கக்கூடிய மின்னூல்கள் – 24/7

நூலகம் தனது மிகைச் செலுத்துகைச் சேவையினூடாக, தரவிறக்கக்கூடிய மின்னூல்களுக்கும் ஒலி நூல்களுக்கும் அணுக்கம் வழங்குகிறது. பொருட்களை நீங்கள் உங்களது கணனிக்கோ அல்லது நகர் கருவிக்கோ தரவிறக்கிக் கொள்ளலாம். நூலகத்தின் வலைத்தளத்தில் அதனைத் தேடிப் பார்த்து, மின்னிரவலைத் தொடங்குக.